குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
ஜெயங்கொண்டம்.
CC.No. 134/2019

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 16ஆம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.சசிக்குமார் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சாஸ்தாகுமரன், மூன்றாம்நிலைஎழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சசிக்குமார் | வயது | : | 45/26 |
| த.பெ/ க.பெ. | : | மகாலிங்கம் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | பிராஞ்சேரி | நிலை | : | LW02/ PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

(1, 2எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரி ஆஜர்)

முதல்விசாரணை:

நான் தற்போது பிராஞ்சேரியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 19.07.2017ம்தேதியன்று மாலை 04.00 மணியளவில், பிராஞ்சேரி சுடுகாட்டில் அம்புஜம் என்பவரின் இறுதி அஞ்சலிக்காக சென்றிருந்தபோது, அறிவழகன் என்பவர் ஜனகரை கட்டையால் தலையில் அடித்தார். அவருக்கு இரத்தம் கொட்டியதால், அவரை நாங்கள் மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அறிவழகன் ஜனகரை எந்த கட்டையால் அடித்தார் என்றால் நினைவில்லை. ஜனகர் எனக்கு என்ன உறவு முறை என்றால் மைத்துனர் முறை ஆவார். பட்டியல் சாட்சி 3 முதல் 5 வரையிலானவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 100 நபர்கள் இருந்தார்கள். ஊர் பொதுமக்களும் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. இறந்துபோன அம்புஜத்திற்கு வாரிசு யாரும் இல்லை என்றால் சரிதான். அவருக்கு மகள் வழி பேரன் ஒருவர் உள்ளார் என்றால் சரிதான். அம்புஜத்தின் மகள் வழிபேரன் கொள்ளி வைக்க கூடாது என்று நாங்கள் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. ஜனகர் குடிபோதையில் வந்து தடுமாறி கீழே விழுந்ததால்தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அந்தகாயத்தை வைத்து எதிரியின் மீது பொய்யான இந்த புகாரை கொடுத்துள்ளார் என்றாலும் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

/ உண்மை நகல்/

ஒம்/-P.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,

ஜெயங்கொண்டம்.